22.01.2026.
IDOP.No.96/2025

ம. சா. 1 ஞானபிரகாசம் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :- (தொடர்ச்சி)

2022ம் வருடம் ஏப்ரல் மாதம் நம் நாட்டு கணக்குப்படி எவ்வளவு ஊதியம் வாங்கிவந்தேன் என்றால் சுமார் 3,50,000/- வாங்கி வந்தேன். என்னிடம் காண்பிக்கப்படுவது என்னுடைய சம்பள சான்றிதழ் என்றால் சரிதான். அது **எமசாஆ.4**. எமசாஆ.4ன்படி என்னுடைய மாத சம்பளம் ரூ.6,50,000/- லட்சம் என்றால் வருமானவரி கழிக்காமல் மேற்படி ஊதியம் உள்ளது. வருமானவரி பிடித்தம்போகத்தான் மேற்படி சம்பளம் என்றால் சரியல்ல. சமரச தீர்வு மையத்திற்கு நான் ஒருமுறை மட்டும் வந்தேன் என்றால் சரிதான். 3.5.2023ம் தேதி நான் என் மனைவி வீட்டிற்கு வீட்டுச்சாவியை பெறுவதற்கும் இருசக்கர வாகனத்தை பெறுவதற்காக மட்டும் சென்றேன் என்றால் என்னுடைய மனைவியை கூப்பிடுவதற்காக சென்றேன். 2022ம் வருடம் 9வது மாதத்திற்கு பிறகு எங்களுக்குள் எந்தவித கம்யூனிகேசனும் இல்லை என்றால் சரிதான். நான் பேசவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இருந்தேன். எதிர்மனுதாரர்தான் என் நம்பரை பிளாக் செய்துவிட்டார். வீட்டுச்சாவியை வாங்குவதற்காக நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றதாகவும் அப்போது வீட்டுக்கு வெளியே நின்றுகொண்டு தகாத வார்த்தைகளால் திட்டியதாகச்சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தின் கரிசனத்தை பெறுவதற்காகத்தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்துவாழவேண்டுமென கூறி வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்துவாழ்ந்தால் அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதாலும் எதிர்மனுதாரரின் எதிர்காலம் இருளடைந்துவிடும் என்பதாலும் என்னுடன் சேர்ந்து வாழ மறுக்கிறார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு எவ்வித மனுமூலமும் கிடையாது என்றாலும், எதிர்மனுதாரரை கொடுமைப்படுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

அதனால் எதிர்மனுதாரருடன் செலவு தொகையுடன் இம்மனு தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.01.22 18:57:11 +0530

Principal District Judge,
Dindigul.